PARIJAT
Enabling. Growth. Responsibly.

# பரிஜாத் பயிர் பாதுகாப்பு
# விவசாயிகளுக்கான பயிற்சி கையேடு











## பாதுகாப்பாக கையாளுதல், சரியான பயன்பாட்டு முறை, நீக்கம், விலங்குகளிடமிருந்து பாதுகாத்தல் மற்றும் முதல் உதவி

# பரிஜாத் பயிர் பாதுகாப்பு
# விவசாயிகளுக்கான பயிற்சி கையேடு


***தொகுப்பாளர்கள்:***
*Dr. மோன ஜோஷி*
*ஜஷோதீப் சர்மா*
*பூஜா பட்*
*(ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி துறை)*
*பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்*

***ஆலோசகர்***
*விபின் சைனி*

***புகைப்பட உதவி***
*விராஜ் ஆனந்த்*

***வடிவமைப்பு உதவி***
*நிதின் தியாகி*

**முதல் பிரசுரம்: 2019**

**பிரசுரித்தவர்:**
பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்

**பதிவு அலுவலகம்**:
எம் -77, I மற்றும் II ஆம் மாடிகள், எம்
பிளாக் மார்க்கெட், கிரேட்டர் கைலாஷ்- II,
புது தில்லி -110048

**வலைத்தளம்**
https://www.parijatagrochemicals.com/

**பதிப்புரிமை© பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் 2018**
அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை இந்த பதிப்பில் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளடக்கங்கள் மற்றும் தகவல்கள் பதிப்புரிமை காப்புடைமையானவை மற்றும் அவை பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமானது. பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு நபரும் இந்த பிரசுரத்தை, வர்த்தகம் செய்யவோ அல்லது வேறுவழியிலோ, காகிதம் அல்லது இணையம் அல்லது வேறு எந்த ஊடகம் அல்லது வேறு வடிவம் மூலமாகவோ, எலக்ட்ரானிக் அல்லது இயந்திரம் மூலமாக முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ நகல், மறுபிரசுரம், திருத்தம், வெளியீடு, கிடைக்கச் செய்தல், விநியோகித்தல் அல்லது பரப்புதல் ஆகியவற்றை மேற்கொள்ளக்கூடாது.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# முன்னுரை

பயிர் பாதுகாப்பானது நவீன விவசாய முறைகளின் ஒருங்கிணைந்த மற்றும் முக்கிய அம்சமாக அமைகிறது. தயாரிக்கும் இடம் முதல் கடைசி பயன்பாட்டு இடம் வரை அனைத்து நிலைகளிலும் உபயோகிப்பவர் மாறும் சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பூச்சிக்கொல்லிகளை கையாள்வதற்கு குறிப்பிட்ட வழிமுறைகள் இருக்கிறது.

பயிர் பாதுகாப்பு வேதிப்பொருட்களை இறுதியாக பயன்படுத்துபவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இந்த கையேடு ஒரு பயிற்சியளிக்கும் கையேடாக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த கையேட்டைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் படிப்பவர்களின் கருத்துகளைத் தொகுப்பாளர்கள் வரவேற்கிறார்கள். பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ், உலகெங்கும் விற்பனையாகும் பயிர் பாதுகாப்பு இரசாயனங்களைத் தயாரிக்கும் ஒரு நிறுவனம்.

பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகப்பிற்கு ஒரு ஆழ்ந்த உறுதி பூண்டுள்ளது. விவசாயிகள் மற்றும் இந்தியாவில் இருக்கும் பல்வேறு பிரிவுகளால் பயிர் பாதுகாப்பு இரசாயனத்தை முறையாகக் கையாளுவதற்கான விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் வழிகாட்டலில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

***விக்ரம் ஆனந்த்***
***இயக்குனர்***
***பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்***

# அட்டவணை


<u>அத்தியாயம் 1</u>

தெளிப்பான்கள் ஒரு அறிமுகம் 1-2

பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டு உபகரணங்களை பராமரிப்பது (பொதுவனவை) 3-4

<u>அத்தியாயம் 2</u>

பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (டஸ்டர்) 5

பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (ஃபுட் (கால் மூலம் இயக்கும்) தெளிப்பான்) 6

பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை)) 7

<u>அத்தியாயம் 3</u>

அறிமுகம் (நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை)தெளிப்பான்) 8

முக்கியமான குழாய் முனைகள் 9

<u>அத்தியாயம் 4</u>

மிகவும் பொதுவான கலவைகள் 10-11

<u>அத்தியாயம் 5</u>

வாங்குவதற்கான குறிப்புகள் 12

சுமந்து செல்வதற்கான குறிப்புகள் 13

சேமித்து வைப்பதற்கான குறிப்புகள் 14

<u>அத்தியாயம் 6</u>

தெளிப்பதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள் 15-16

தெளிப்பதற்கான பாதுகாப்பு குறிப்புகள் 17-18

தெளித்த பிறகு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள் 19-20

# அட்டவணை

PARIJAT
Enabling. Growth. Responsibly.


**அத்தியாயம் 7**

பூச்சிக்கொல்லிகளை அப்புறப்படுத்துவது 21-22

**அத்தியாயம் 8**

பழத்தோட்டம் குறிப்பிட்ட பாதுகாப்பு குறிப்புகள் 23-25

**அத்தியாயம் 9**

குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (தேனிகள்) 26

குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (பறவைகள்) 27

குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (மீன்கள்) 28

குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (கால்நடைகள்) 29

**அத்தியாயம் 10**

நச்சு அறிகுறிகள் 30

முதல் உதவி மற்றும் பரிசோதனை 31

குறிப்பிட்ட முதல் உதவி மற்றும் பரிசோதனை 32

குறிப்பிட்ட நச்சேற்றத்திற்கான அறிகுறிகள் 33

**அத்தியாயம் 11**

நச்சுத்தன்மையின் முக்கோணம் 34

**அத்தியாயம் 12**

சில செய்யகூடியவை மற்றும் செய்யக்கூடாதவை 35

பரிஜாத் பற்றி 36


PARIJAT Enabling. Growth. Responsibly.

# அத்தியாயம்:1
# தெளிப்பான்கள் ஒரு அறிமுகம்

**தெளிப்பான்** என்பது தெளிக்கும் திரவத்தை நுண்துகளாக்கி மேலும் அதை முறையாக பரப்புவதற்கு சிறிது அழுத்தத்துடன் வெளியேற்றும் ஒரு சாதனம். பூச்சிக்கொல்லிகளின் அதிகப்படியான பயன்பாட்டைத் தவிர்க்க அது பயன்படுத்தப்படும் அளவையும் இது கட்டுப்படுத்துகிறது.



மௌண்டேட் பூம்



டுரோன்

PARIJAT
Enabling. Growth. Responsibly.

டஸ்டர்கள், நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை) தெளிப்பான், ஃபுட் (கால் மூலம் இயக்கும்) தெளிப்பான், ஏரியல் தெளிப்பான்கள் (டுரோன் போன்றவை) போன்ற பல்வேறு வகையான தெளிப்பான்கள் இருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு தேவையான கன அளவு தெளிப்பின் அடிப்படையில் தெளிப்பான் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது




நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை)

**எச்.வி (HV): அதிக கன அளவு = 150 லிட்டர்/ஹெக்டேருக்கும் அதிகமானது**
பூச்சிக்கொல்லிகள், பூசண கொல்லிகள், களைக்கொல்லிகள் ஆகியவற்றிற்கு ஏற்றது.

**எல்.வி (LV): குறைந்த கன அளவு = சுமார் 10 முதல் 150 லிட்டர்/ஹெக்டேர்**
பூச்சிக்கொல்லிகள், பூசண கொல்லிகள், ஆகியவற்றிற்கு ஏற்றது.

**யு.எல்.வி (ULV): மிக குறைந்த கன அளவு = சுமார் 1 முதல் 5 லிட்டர்/ஹெக்டேர்**
பூச்சிக்கொல்லிகளுக்கு ஏற்றது.



ஃபுட் (கால் மூலம் இயக்கும்) தெளிப்பான்

PARIJAT Enabling. Growth. Responsibly.

# பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டு உபகரணங்களை பராமரிப்பது (பொதுவனவை)




- தெளிக்கும் பருவத்தில் தெளிப்பான்களை சரியாக பராமரிக்க வேண்டும். தெளிக்கும் பருவம் ஆரம்பிக்கும் முன் சரிபார்த்து தயார்ப்படுத்த வேண்டும்.
- இரண்டு புறமும் சுத்தம் செய்வது மிகவும் அவசியம், அடுத்த நாள் அதே இரசாயனத்தை பயன்படுத்தும் போதும், தெளிப்பானின் இரண்டு புறத்தையும் நாள்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்
- குறிப்பாக அனைத்து நகரும் பாகங்களும், தினசரி வேலையைத் தொடங்குவதற்கு முன் தெளிப்பான் வழக்கமாகவும் முழுமையாகவும் உராய்வு நீக்கம் செய்யப்பட வேண்டும்.



PARTS DIAGRAM

PARTS LIST

| | |
|---|---|
| 1 | Handle securing ring |
| 2 | Connecting rod |
| 3 | Guide bushing |
| 4 | Split pin |
| 5 | Tank base |
| 6 | Washer |
| 7 | Nut |
| 8 | Washer |
| 9 | Screw |
| 10 | Strap buckle |
| 11 | Nozzle assembly |
| 12 | Washer |
| 13 | Lance |
| 14 | Trigger valve |
| 15 | Adaptor |
| 16-1 | Locking sleeve |
| 16-2 | O-ring |
| 17 | Hose barb |
| 18 | Hose nut |
| 19 | Hose |
| 20 | Carrying strap end fitting |
| 21 | Carrying strap hook |
| 22 | Pump handle attachment clip |
| 23 | Washer |
| 24 | Carrying strap attachment |
| 25 | Pump |
| 26 | Valve ball |
| 27 | Valve seal |
| 28 | Valve ball |
| 29 | Cup washer |
| 30 | Carrying strap |
| 31 | Pump handle |
| 32 | Air chamber |
| 33 | Pesticide tank |
| 34 | Felt sealing washer |
| 35 | Pump handle grip |
| 36 | Air chamber lid |
| 37 | Pesticide tank filling filter |
| 37-1 | Sealing washer |
| 38 | Pesticide tank lid |
| 39 | Handle & lance retaining clip |
| 40 | Split pin |

**KS-16**
**KNAPSACK SPRAYER**
**INSTRUCTION MANUAL**

FEATURES

The KS-16 lever operated knapsack sprayer is a high quality robust and durable general-purpose sprayer.

- Proven reliability – tested to over 40,000 operations without failure.
- 16 litre ergonomically designed HDPE tank.
- Large filling aperture with filter.
- Leak-proof valve on tank lid.
- Lightweight and profiled for maximum operator comfort.
- Internal piston pump.
- Internal agitation of liquid.
- Operating pressure range 1 – 4 bar (15 – 60 PSI).
- Adjustable straps with low absorbency of liquid.
- Metal lance and trigger valve handle for maximum durability.
- Hytrel™ pump seal and Viton™ valve and hose seals for maximum resistance to aggressive spray liquids.
- Retaining clip for handle & lance.
- Supplied with interchangeable nozzle tips for herbicide and insecticide/fungicide application.
- Optional constant flow valve.

- மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தெளிப்பான்கள், அது புதிதாக இருந்தாலும், அனைத்துத் தெளிப்பான்களும் சேதம் மற்றும் பழுதடையக்கூடும்.
- அனைத்துப் பாகங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். தேய்மானமான, உடைந்த மற்றும் பழுதடைந்த பாகங்களை மாற்ற வேண்டும்.
- ஒரு வேளை குழாய் முனைகள் சேதமடைந்து 10% அதிகமாக டெலிவர் செய்தால், ஒரு சில மணி நேரங்களில் விரயமாகும் இரசாயனத்தின் விலை ஒரு புதிய சாதனத்தின் விலையை ஈடு செய்யும்.
- ஒவ்வொரு புதிய தெளிப்பானுடனும் ஒரு எளிய ஆலோசனை மற்றும் பாகங்கள் மற்றும் தொகுப்புகளின் விளக்கப்படங்களின் விரிவான குறிப்பு புத்தகம் வழங்கப்படுகிறது.
- தெளிக்கும் பருவம் முடிந்து தெளிப்பான்களை கிடங்கில் வைப்பதற்கு முன் சிறிது நேரம் செலவழித்து தெளிப்பான்களை சுத்தம் செய்ய வேண்டும்.
- தெளிப்பான்களில் எஞ்சியிருக்கும் இரசாயனம் பல மாதங்களுக்கு அங்கு தங்கி இருந்தால், தெளிப்பான்களின் பாகங்கள் துரு பிடித்துவிடும், அதனால் தொளிப்பான்களை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும். வடிப்பான்கள் மற்றும் குழாய் முனைகளை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும். துரு பிடித்த பாகங்களுக்கு பெயிண்ட் பூச வேண்டும். பம்பிற்கு கிரீஸ் பூச வேண்டும் மற்றும் நகரும் மற்றும் செயல்படும் பாகங்களுக்கு முழுமையாக எண்ணெய் இட வேண்டும்.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# அத்தியாயம்:2
# பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (டஸ்டர்கள்)




PARIJAT
Enabling Growth Responsibly

டஸ்டர் என்பது, பௌடர் போன்று இருக்கும் பூச்சிக்கொல்லிகளை பயிர்களின் மேல் தூவ பயன்படுத்தும் ஒரு சாதனம். பூச்சிக்கொல்லிகளைப் பயிர்களுக்கு மேல் நுண்ணிய துகள்களாகப் பரப்புவதற்கு அது காற்றோட்டத்தைப் பயன்படுத்துகிறது. தற்போதைய காலகட்டத்தில் இவை பொதுவாக பயன்படுத்தப்படுவதில்லை, இரசாயனங்களைத் தூவும்போது, அந்த வேலையைச் செய்பவர்கள் அதை உள்ளிழுக்கிறார்கள் மேலும் அது அவர்களின் உடல் நலத்தைப் பாதிக்கிறது.

# அத்தியாயம்:2
# பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (ஃபுட் (கால் மூலம் இயக்கும்) தெளிப்பான்)



**ஃபுட்**தெளிப்பான் என்பது கையால் அசைத்து இயக்கும் தெளிப்பானின் ஒரு மாற்றியமைக்கப்பட்ட பதிப்பு. இந்த பம்பு தேவையான பிடிமானங்களுடன் நேர் நிலையில் நிறுத்தப்படுகிறது. பெடலை அழுத்தும்போது உருளை மேலும் கீழும் நகர்கிறது. அழுத்த அறையில் அழுத்தமேற்றம் மற்றும் திரவம் உருளையை கடந்து செல்வதற்கு உருளை தொகுப்பில் ஒரு வாயிற்கோளம் (பந்து வால்வு) பொருத்தப்பட்டிருக்கிறது. இது பெரும்பாலும் பழத்தோட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# அத்தியாயம்:2
# பெரும்பாலும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் தெளிப்பான் வகைகள் (நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை)




நாப்தெளிப்பான் என்பது திரவத் துளிகளாகப் பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்கப் பயன்படுத்தும் ஒரு சாதனமாகும். இவை அதிகமாக பயன்படுத்தப்படுகிறது மேலும் அதிகமான பரப்பளவை கவர் செய்யும். கையால் இயக்கப்படுவது, சக்தியால் இயக்கப்படுவது, கை தெளிப்பான், நாப்சாக் தெளிப்பான், இழுவை தெளிப்பான், கையால் அசைத்து இயக்கும் தெளிப்பான், மிகக் குறைந்த கன அளவு தெளிப்பான், ஃபுட் தெளிப்பான் அல்லது பெடல் பம்பு போன்ற பல வகைப்படும்.

# அத்தியாயம்:3
# நாப்சாக் (முதுகில் சுமக்கும் பை) தெளிப்பான் (அறிமுகம்)




நாப்சாக் தெளிப்பான் சாதனம், நாப்சாக் டேங் உடன் இணைக்கப்பட்ட அழுத்தமேற்றும் சாதனம், லைன் மற்றும் தெளிக்கும் குழாய் முனைகளை உள்ளடக்கியது, பெரும்பாலும் பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பயிர்களுக்காக பெரும்பாலும் பயன்படுத்தப்படும் தெளிப்பான் இந்த நாப்சாக் தெளிப்பான். தெளிப்பானைப் பயன்படுத்தத் தொடங்கும் முன் அதன் பாகங்களை பற்றி தெரிந்துகொள்வது அவசியம்.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# அத்தியாயம்:3
# முக்கியமான தெளிப்பான்கள் (குழாய் முனைகள்)

### உள்ளீடற்ற கூம்பு

இவை முதன்மையாக இலைத்தொகுதி ஊடுருவலுக்கு பயன்படுத்தப்படுகிறது. பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சைக் கொல்லி ஆகியவற்றிற்கு இது பயன்படுத்தப்படுகிறது





### தட்டை விசிறி

இலைத்தொகுதி ஊடுருவல் தேவைப்படாத செயல்களுக்கு இவை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இவை களைக்கொல்லிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

### வேகமாக தெளிக்கும் குழாய்கள் (ஃப்ளட் ஜெட்)

வேகம் மற்றும் அதிகமான பரப்பிற்கு இவை உகந்தது, ஏனென்றால் இவை அகண்ட கோணத்தில் பரவும் மற்றும் தட்டை விசிறி வகை. இவை களைக்கொல்லிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.



# அத்தியாயம்:4
# மிகவும் பொதுவான கலவைகள்

| கலவை | பெயர் | பயன்பாடு |
|---|---|---|
| டி.எஸ் | உலர்ந்த விதை நேர்த்திக்கான பௌடர் | விதை/கை டிரஸ்ஸிங் |
| **ஜி.ஆர்** | **குருணை** | **வீசி எறிதல்** |
| **இ.சி** | **குழம்பாக மாறும் திரட்டு** | **தெளிப்பு (ஸ்ப்ரே)** |
| இ.ஜி | குழம்பாக மாறும் குருணை | வீசி எறிதல் |
| இ.எஸ் | விதை நேர்த்திக்கான திரவக்குழம்பு | விதை/கை டிரஸ்ஸிங் |
| **எஸ்.சி** | **இடைநீக்க செறிவு** | **தெளிப்பு (ஸ்ப்ரே)** |
| எஸ்.டி | நேரடி தெளிப்பிற்கான இடைநீக்க செறிவு | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.இ | சஸ்போ-திரவக்குழம்பு | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.ஜி | நீரில் கரையும் குருணை | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.எல் | கரையக்கூடிய செறிவு | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.ஒ | பரவும் எண்ணெய் | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.பி | நீரில் கரையும் பௌடர் | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எம்.இ | மைக்ரோ-திரவக்குழம்பு | தெளிப்பு (ஸ்ப்ரே) |

PARIJAT
Enabling. Growth. Responsibly.

| கலவை | பெயர் | பயன்பாடு |
|---|---|---|
| எஸ்.டி | நீரில் கரையும் மாத்திரைகள் | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஸ்.யு | மிகக் குறைந்த கன அளவு (யு.எல்.வி) இடைநீக்க செறிவு | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| வி.பி | ஆவி வெளிப்படுத்தும் தயாரிப்பு | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| டபள்யு.ஜி | கலக்கக்கூடிய நீர்மத்தில் கலங்கும் குருணை | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| டபள்யு.பி | நனையும் பௌடர் | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| டபள்யு.டி | கலக்கக்கூடிய நீர்மத்தில் கலங்கும் மாத்திரைகள் | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| இசட்.சி | சி.எஸ் மற்றும் எஸ்.சி ஒரு குறிப்பிட்ட கலவை | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| இசட்.இ | சி.எஸ் மற்றும் எஸ்.இ-இன் ஒரு குறிப்பிட்ட கலவை | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| இசட். டபள்யு | சி.எஸ் மற்றும் இ.டபள்யு-இன் ஒரு குறிப்பிட்ட கலவை | தெளிப்பு (ஸ்ப்ரே) |
| எஃப்.எஸ் | விதை நேர்த்திக்கான பாயக்கூடிய செறிவு | கை/விதை ட்ரெஸ்சர் |
| ஒ.டி | எண்ணெய் பகிர்வு | தெளிப்பு (ஸ்ப்ரே) |

PARIJAT Enabling Growth Responsibly

# அத்தியாயம்:5
# வாங்குவதற்கான குறிப்புகள்










PARIJAT
Enabling. Growth. Responsibly.

வாங்குவதற்கு முன் லேபிளில் பரிந்துரைககப்பட்ட குறிப்புகள், பயன்படுத்தும் முறைகள், காலாவதியாகும் தேதி, ஏற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகோரல்கள், நச்சேற்றதிற்கான அறிகுறிகள், மற்றும் முதல் உதவி குறிப்புகள் போன்றவற்றை படிக்கவும். பூச்சிக்கொல்லிகளை முறையான ரசீதுகளுடன் மட்டுமே வாங்க வேண்டும்

# அத்தியாயம்:5
# சுமந்து செல்வதற்கான குறிப்புகள்










- கீழே சிந்துவதை தவிர்க்க கன்டெய்னரை உங்கள் இடுப்பு அளவிற்கு கீழே வைக்கவும்.
- பூச்சிக்கொல்லி மூட்டையைத் திறக்க கூரான கத்தியைப் பயன்படுத்தவும்; பல்லால் கடித்து கிழிக்க வேண்டாம் அல்லது லேபிளை கிழிக்க வேண்டாம்.
- பூச்சிக்கொல்லிகளை நல்ல வெளிச்சம் மற்றும் காற்றோட்டமான வெளிப்புறத்தில் வைத்து கலக்க வேண்டும்,
- அளவிற்கு அதிகமான பூச்சிக்கொல்லிகளை முதுகு, தோள்பட்டை மற்றும் கழுத்தில் சுமக்க வேண்டாம். நீங்கள் இரண்டு சக்கர வாகனத்தில் தயாரிப்பை சுமந்து செல்லும்போது, அதற்கு ஏற்ற பைகளை பயன்படுத்த வேண்டும்

Parijat
Enabling Growth. Responsibly.

# சேமித்து வைப்பதற்கான குறிப்புகள்



✓பூச்சிக்கொல்லிகளை வீட்டிற்கு உள்ளே சேமித்து வைப்பதை தவிர்க்க வேண்டும்.

✓அசல் சீல் செய்யப்பட்ட கன்டெய்னர்களில் வைக்கவும், கீழே சிந்திய பூச்சிக்கொல்லிகளை விற்பதற்கோ அல்லது சேமிக்கவோ வேறு கன்டெய்னர்களில் வைக்க வேண்டாம். பூச்சிக்கொல்லிகளை அதிக வெப்பம் அல்லது உறைதலுக்கு வெளிப்படுத்த கூடாது.

✓கீழே சிந்திய மற்றும் வழிந்த தயாரிப்புகள் பரவாமல் தடுக்க, எப்போதும் பாதி வெட்டப்பட்ட மண் நிரப்பிய டிரம் அருகாமையில் இருக்க வேண்டும்.

✓பூச்சிக்கொல்லிகளை சமையலறை மற்றும் கிணறு, ஆழ்துளை கிணறு போன்ற நீர் வளங்கள் இருக்கும் இடங்களிலிருந்து தொலைவில் வைக்கவேண்டும்.

✓பூச்சிக்கொல்லிகளை குழந்தைகளிடமிருந்து பாதுகாப்பான தூரத்தில் வைக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகளை கால்நடை தீவனங்களுக்கு அருகாமையில் வைக்க வேண்டாம் அல்லது கால்நடைகளை ஒரு போதும் பூச்சிக்கொல்லிகளை சேமித்து வைத்திருக்கும் இடத்திற்கு அருகில் மேய அனுமதிக்க வேண்டாம்.

PARIJAT Enabling Growth Responsibly

# அத்தியாயம்:6
# தெளிப்பதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்








✓கன்டெய்னரின் மேல் இருக்கும் லேபிளில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் டோஸ்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். பூச்சிக்கொல்லிகளை கலக்கும்போது மற்றும் தெளிக்கும்போது இறுக்கமான உடை, கையுறை மற்றும் கண்ணாடிகளை உபயோகிக்கவும்.

✓டோஸ் கச்சிதமாக கணக்கிடப்பட வேண்டும். அதிகமான டோஸ் மற்றும் குறைவான டோஸ் பயிர் நஷ்டத்தை விளைவிக்கும் மேலும் நுகர்வோருக்கு உடல் பாதிப்பை ஏற்படுத்தும். டோஸ் அளவிடுவதற்கு முன் முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி பயன்படுத்த வேண்டும்.

✓பூச்சிக்கொல்லி பாட்டில் மூடியில் இருக்கும் அளவு கப் அல்லது அளவு கோப்பையை பயன்படுத்தப்படும் இரசாயனத்தின் டோஸ் கணக்கிட உபயோகிக்க வேண்டும்.

✓காற்று அடிக்கும் திசைக்கு எதிராக நின்றுகொண்டால், பூச்சிக்கொல்லிகள் நம் மீது விழுவதைத் தவிர்க்கலாம்.

PARIJAT Enabling Growth Responsibly








✓வெப்பநிலையானது அளவிற்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால் பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும். வெப்பநிலை 30ºC-க்கும் அதிகமாகவோ அல்லது 10ºC-க்கு குறைவாகவோ இருந்தால் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகளை வெப்பம் அதிகமாக இருக்கும் நாட்கள் அல்லது மழை நாட்களில் தெளிக்கக்கூடாது.

✓பூச்சிக்கொல்லி தேவையில்லாத இடங்களில் தேங்கி நிற்பதை கவனமாக தவிர்க்க வேண்டும்

✓எப்போதும் தெளிப்பதற்கு முன் தெளிப்பானை கழுவ வேண்டும். தெளிப்பானின் டேங்கை கழுவும்போது கட்டாயம் கையுறை பயன்படுத்த வேண்டும்.

✓நீர் வளங்கள் இருக்கும் இடங்களுக்கு அருகில் டேங்கை கழுவக்கூடாது. கலக்குவதற்கு பயன்படுத்தும் நீர் அழுக்காகவோ அல்லது எண்ணெய் பிசுக்குடனோ இருக்கக்கூடாது.

Enabling Growth Responsibly

# தெளிப்பதற்கான பாதுகாப்பு குறிப்புகள்







✓தெளிக்க பயன்படுத்தும் சாதனத்தை சரிபார்க்க வேண்டும்.

✓ஹோஸ் அல்லது இணைப்புகளில் கசிவை சரிபார்க்க வேண்டும், குழாய் முனைகளின் தேய்மானம் அல்லது அடைப்புகளை சரிபார்க்க வேண்டும் மற்றும் இரசாயனம் வழிந்து விடாமல் இருக்க வடிப்பான் திறப்புகளில் இருக்கும் சீல்களைச் சரிபார்க்க வேண்டும். தெளிக்கும் சாதனத்தை பயன்படுத்துவதற்கு முன் அளவு திருத்தம் செய்ய வேண்டும்.

✓சாதனம் தயாரிப்பாளரின் விவரக்குறிப்புகளுடன் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் தெளிக்கும் தயாரிப்பின் லேபிள் குறிப்புகள் கடைப்பிடிக்கப் பட வேண்டும்.

✓தெளிப்பான் டேங்கை முகர்ந்து பார்க்கக்கூடாது. கரைசலைத் தயாரிக்கும்போது அல்லது தெளிக்கும்போது சாப்பிடவோ, குடிக்கவோ அல்லது வாயில் எதையும் மெல்லவோ கூடாது.

✓முறையான பி.பி.ஈ சாதனங்கள் இல்லாதப்பட்சத்தில் காலனி மற்றும் கையுறைகளுக்கு பாலித்தீன் பைகளை பயன்படுத்தலாம். தெளிப்பானை லோட் செய்வதற்கு முன் ஸ்ட்ரப் சரியாக இருக்கிறதா என்று சரி பார்க்க வேண்டும்.

PARIJAT
Enabling Growth Responsibly










✓அடைப்பு இருக்கும் குழாய் முனையை வாயால் ஊதவோ சுத்தம் செய்யவோக் கூடாது. தெளிப்பானுடன் கட்டிவைக்கப்பட்டிருக்கும் பழைய பல் துலக்கும் பிரஷ்சை பயன்படுத்த வேண்டும் மற்றும் சுத்தமான நீரில் கழுவ வேண்டும்.

✓பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளுக்கு ஒரே தெளிப்பானை பயன்படுத்தக்கூடாது.

✓தெளிக்கும்போது முறையான தனிநபர் பாதுகாப்பு சாதனங்களை (பி.பி.ஈ) பயன்படுத்த வேண்டும். உடல் முழுவதையும் மறைக்கும் அங்கி, கண்ணாடிகள், காலணிகள், கையுறைகள், முக கவசங்கள், தொப்பி போன்றவை இதில் அடங்கும். தெளிக்கும்போது புகையிலை/தின்பண்டங்களை மெல்லக்கூடாது.

✓தெளிக்கும்போது குழந்தைகள் மற்றும் வீட்டில் வளர்க்கும் விலங்குகள் அருகில் இருக்கக்கூடாது.

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# தெளித்த பிறகு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்




- தெளித்த பிறகு தெளிப்பானை டிட்டர்ஜென்ட் கொண்டு சுத்தமாக கழுவ வேண்டும். நீர் வளங்களுக்கு அருகாமையில் கழுவக்கூடாது மற்றும் முக கசம், கையுறை போன்ற பி.பி.ஈ அணியாமல் கழுவக்கூடாது.
- பைப் மற்றும் வால்வுகளை நீரில் அலசி கழுவ வேண்டும். மூன்று முறை அலசி கழுவுவது சிறந்த முறை, இருப்பினும் டேங்கை சுத்தம் செய்வதற்குப் பழைய பல் துலக்கும் பிரஷ்சை பயன்படுத்தலாம். வடிப்பான் அடித்துக்கொண்டு இருந்தால், முள் கம்பி பிரஷ் அல்லது பல் துலக்கும் பிரஷ் உதவியால் மென்மையாக தேய்க்க வேண்டும் மற்றும் மீதமிருப்பவைகளை முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

# தெளித்த பிறகு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்







- வயலில் இருந்து திரும்பிய உடன் சுத்தமாக குளிக்க வேண்டும். சோப்பு போட்டு குளிக்க வேண்டும். உங்கள் உடைகளை துவைத்து சுத்தம் செய்ய வேண்டும்.
- குளிப்பதற்கு முன் குழந்தைகளை தொட வேண்டாம்.
- வயலில் இருந்து திரும்பிய உடன் உங்கள் உடைகளை துவைத்து சுத்தம் செய்ய வேண்டும். கழிவு நீரை நீர் வளங்களுடன் கலக்க விடக்கூடாது அல்லது தெளிப்பான்களை நீர் வளங்களுக்கு அருகில் கழுவக்கூடாது.
- பரிந்துரைக்கப்பட்டப்படி அல்லது அரசு விதிமுறைகளின்படி கன்டெய்னர் மற்றும் மீதமிருக்கும் பூச்சிக்கொல்லிகளை அப்புறப்படுத்த வேண்டும். வீடு/வயலில் பாட்டில்களை மீண்டும் பயன்படுத்தக்கூடாது, ஏனெனில் அவை நச்சு. கன்டெய்னர் / பாட்டில் / பாக்கெட் ஆகியவற்றை நீர் வளங்களில் தூக்கிப் போடக்கூடாது.

PARIJAT
Enabling Growth. Responsibly.

# அத்தியாயம்:7 பூச்சிக்கொல்லிகளை அப்புறப்படுத்துவது







PARIJAT
Enabling Growth Responsibly

➢தெளித்தப் பிறகு, கன்டெய்னரில் சிறிதளவு மீதமிருக்கலாமா அல்லது அதை காலியாக வைக்க வேண்டுமா? பூச்சிக்கொல்லிகள் மீதமிருந்தால், அதை வீட்டில் இருந்து தூரமாக ஒரு அறையில் வைத்து மேலும் அந்த அறையை பூட்டி வைக்க வேண்டும். கன்டெய்னரை மாற்றக்கூடாது. அப்புறப்படுத்துவதற்கு பின்வருவனவற்றை பார்க்கவும்,

➢நாப் சாக் தெளிப்பான் மற்றும் மற்ற பூச்சிக்கொல்லி தெளிக்கும் சாதனங்களை கழுவிய பிறகு மாற்றும் ஐ.ஆர்.எஸ் நடவடிக்கைகளுக்கு பிறகு கழிவு நீரை ஒரு டிரமில் அல்லது கன்டெய்னரில் சேகரித்து, அதை இறுக்கமாக மூடி, பரிந்துரைக்கப்பட்டபடி அல்லது அரசு விதிமுறைகளின்படி அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.







PARIJAT
Enabling. Growth. Responsibly.

- உலோகம், பிளாஸ்டிக் அல்லது கண்ணாடி ஆகியவற்றில் செய்யப்பட்ட கன்டெய்னர்களை மூன்று முறை அலசி கழுவும் முறையில் மாசு நீக்கம் செய்யலாம்.
- மீதமிருக்கும் பூச்சிக்கொல்லி மற்றும் நீரை ஆற்று நீரில் கலக்க விடக்கூடாது அல்லது வீடு அல்லது குடியிருப்பு பகுதிகளுக்கு அருகில் தூக்கிப் போடக்கூடாது.
- மாசு நீக்கம் செய்யப்பட்ட கன்டெய்னர்களை ஒரு போதும் வீட்டில் எதற்கும் பயன்படுத்தக்கூடாது.

# அத்தியாயம்:8
# பழத்தோட்டம் குறிப்பிட்ட பாதுகாப்பு குறிப்புகள்



மரங்களுக்கு மேல் தெளிக்கும்போது மரத்தில் இருந்து குறைந்தபட்ச இடைவெளியை கடை பிடிக்க வேண்டும், ஏனெனில் நேராக மேலே அடிக்கும்போது திரவம் நம்மீது விழுவதை தவிர்க்க. அதிகபட்சம் 45 டிகிரி கோணம் வரை தெளிக்கலாம். நச்சேற்றத்தை தவிர்க்க பி.பி.ஈ -களைப் பயன்படுத்த வேண்டும் தெளிப்பதற்கு முன் தெளிப்பானை அளவு திருத்தம் செய்ய வேண்டும்.

# பழத்தோட்டம் குறிப்பிட்ட பாதுகாப்பு குறிப்புகள்



தெளிப்பதற்கு முன் பரிந்துரைக்கப்பட்டபடி மரத்தை சுற்றி ஒரு கால்வாயை உண்டுபண்ண வேண்டும். தெளிக்கும்போது நகத்திற்குள் இரசாயனம் போகாமல் இருப்பதற்கு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த முறையை பின்பற்றும்போது காலணிகள்/பூட்ஸ் கட்டாயம் அணிய வேண்டும்.





Enabling. Growth. Responsibly.

தெளிப்பதற்கு முன் மற்றும் பின் டிடர்ஜென்ட் கொண்டு டிரமை கழுவ வேண்டும், டிரமில் இருந்து கீழே கொட்டும் நீரை நீர் வளங்களில் கலக்க விடக்கூடாது. குழந்தைகள் மற்றும் விலங்குகள் எளிதில் அணுக முடியாத இடத்தில் தனியாக கழுவ வேண்டும்.

# அத்தியாயம்:9
# குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (தேனிகள்)







தேனீக்கள், குறிப்பாக வேளாண்மை தேனீக்கள், உணவுப் பயிர்களில் மகரந்தச் சேர்க்கைக்கு மிக முக்கியமானவை. தேனீக்களின் மய்ச்சல் தடும் காலத்தில் தெளிக்கக் கூடாது

# குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (பறவைகள்)








விடியற்காலை அல்லது மாலை பொழுதில் தெளிக்க வேண்டும் அதனால் பறவைகள் பாதிக்கப்படாமல் இருக்கும். மரத்தின் கூடாரத்திற்குள் மட்டுமே தெளிக்க வேண்டும் மேலும் காற்றில் தெளிக்கக்கூடது, அது பறவைகளின் பாதிப்பை குறைக்கும்.

# குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (மீன்கள்)







மீன் வளர்க்கும் பகுதிகள் அல்லது நீர் வளங்களுக்கு அருகில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்க வேண்டாம். நச்சு பொருள்கள் நீரில் கலப்பதினால், நீர் வாழும் உயிரினங்கள் இறந்துப் போகலாம். எச்சரிக்கைக்கு லேபிளை படிக்கவும்.

# குறிப்பாக விலங்குகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள் (கால்நடைகள்)







நீர் வளங்களுக்கு அருகில் பூச்சிக்கொல்லிகளை தெளிப்பதை தவிர்க்க வேண்டும் ஏனெனில் அதே நீர் வளங்களை குடிக்க பயன்படுத்தும் கால்நடைகளின் உடல்நிலை பாதிக்கப்படலாம். பூச்சிக்கொல்லி இருந்த கன்டெய்னர்களை சாலை அல்லது வயலில் தூக்கிப்போடக்கூடாது, ஏனெனில் கால்நடைகள் அதை முகர்வதால் அல்லது மீதமிருப்பதை குடிப்பதனால் இறந்து போகலாம். கால்நடை தீவனத்திற்கு அருகே இரசாயனங்களை தெளிக்கவோ அல்லது சிந்தவோக் கூடாது. பூச்சிகொல்லி தெளிக்கப்பட்ட பகுதியில் கால்நடைகளை அணுக விடக்கூடாது.

# அத்தியாயம்:10
# நச்சேற்றதிற்கான அறிகுறிகள்




**பூச்சிகொல்லி நச்சேற்றதிற்கான வழக்கமான அறிகுறிகள்:**




- தலைச்சுற்றல், மங்கலான பார்வை
- மயக்கம்
- வாந்தி, இருமல்
- தலைவலி
- கண்பாவை விரிதல்
- மூக்கு அல்லது வாயிலிருந்து நுரைத்தல் மற்றும் உறைதல்
- மூச்சிரைப்பு/ மூச்சுத்திணறல்
- தள்ளாட்டம்
- உமிழ்நீர்ச் சுரத்தல்
- சிவந்து போதல் மற்றும் தோல் அரிப்புணர்வு
- வயிற்று வலி
- வயிற்றுப்போக்கு
- அளவிற்கு அதிகமான வியர்வை மற்றும் குமட்டல்
- தசைகளில் நடுக்கம்





PARIJAT
Enabling Growth. Responsibly.

# அத்தியாயம்:10
# முதல் உதவி மற்றும் பரிசோதனை









- ➢பூச்சிக்கொல்லிகள் உடலில் பட்ட இடங்களை உடனே சோப் மற்றும் சுத்தமான நீரில் கழுவ வேண்டும்.
- ➢பூச்சிக்கொல்லி கண்ணில் பட்டிருந்தால் சுமார் 15 நிமிடங்களுக்கு கண்களை சுத்தமான நீரில் கழுவ வேண்டும்.
- ➢மருத்துவரிடம் ஆலோசிக்காமல் பாதிக்கப்பட்ட பகுதியில் எந்தவிதமான களிம்பையும் தடவ வேண்டாம் அல்லது கொப்பளங்களை உடைக்க வேண்டாம். பூச்சிக்கொல்லி மேலே பட்ட உடையை உடனே அகற்ற வேண்டும், அது மேலும் காயம் ஏற்படுவதை குறைக்கும்.
- ➢யாராவது பூச்சிக்கொல்லியை சாப்பிட்டுவிட்டால், தயாரிப்பின் மேல் இருக்கும் லேபிளில் உள்ள குறிப்புகளை படித்து, பூச்சிக்கொல்லியை சாப்பிட்ட நபரை வாந்தி எடுக்க வைக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்று சரிபார்க்க வேண்டும். அந்த நபர் மூச்சை இழந்து இருந்தால், அவரது உடைகளை தளர்த்தி வாயோடு வாய் வைத்து மூச்சு விட வழி வகுக்கவும்.
- ➢உடனடியாக மருத்துவ உதவியை அழைக்கவும்.
- ➢லேபிள் குறிப்பில் வாந்தி எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தால், அந்த நபருக்கு உப்பு கரைச்சலை கொடுக்கவும் மற்றும் வாந்தி எடுத்த பிறகு அவருக்கு துளசி, சிவரிக்கீரைபோன்ற கசப்பான சாப்பிடக்கூடிய இலைகளை கொடுக்கவும்.

PARIJAT Enabling Growth. Responsibly


# குறிப்பிட்ட முதல் உதவி மற்றும் பரிசோதனை



1. **கரிமப்பாஸ்பேட்டு கலந்த பொருட்களால்** நச்சேற்றம். அத்திரோபீன் மற்றும் 2 பி.ஏ.எம் இந்த வகை நச்சேற்றத்திற்கு பரிந்துரைக்கப்படும் மாற்று மருந்துகள். (உதாரணமாக: மாலதியோன், பாரதியான், டயசினான், ஃபெந்தியன், டிக்ளோர்வோஸ் போன்றவை)
2. **கார்பமேட்ஸ்களும்** நச்சேற்றும். நச்சேற்றம் ஏற்பட்டால் அத்திரோபீன் பயன்படுத்த வேண்டும், ஆனாலும் ஆச்சைமை 2 பி.ஏ.எம் ஆக பயன்படுத்தக்கூடாது. (உதாரணமாக: கார்போபுரான், ஆல்டிகார்ப், கார்பரில் போன்றவை.

**<u>யுனிவர்சல் மாற்று மருந்து</u>**
**50% திறன்சோ கரி+ 25% மக்னீசியம் ஆக்சைடு+ 25% பதமாக்கி அமிலம்**

3. தெளிப்பதற்கு முன் முறையான பி.பி.ஈ களை பயன்படுத்த வேண்டும்
4. இசட்.சி போன்ற கலவைகளை லாம்ப்டா சைஹலோத்ரினுக்கு பயன்படுத்த வேண்டும்
5. காற்று வீசும் திசையில் தெளிக்க வேண்டும், அப்போது இரசாயனம் உங்கள் மேல் விழாது
6. உங்கள் முகத்தை முறையான முக கவசம் கொண்டு பாதுகாக்கவும்



PARIJAT
Enabling. Growth. Responsibly.

# குறிப்பிட்ட நச்சேற்றத்திற்கான அறிகுறிகள்


| இரசாயனங்கள் | பிரச்சனைகள் | குணமாக்குதல் / தீர்வுகள் / விவசாயி பழக்க வழக்கம் |
|---|---|---|
| லாம்ப்டா சைஹலோத்ரின் | தோல் அரிப்புணர்வு | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |
| கந்தகம் | தோல் அரிப்புணர்வு | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |
| செம்பு | தோல் அரிப்புணர்வு | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |
| புரோபினோபோஸ் + சைபர்மெத்ரின் | தோல் அரிப்புணர்வு/ மூச்சுத்திணறல் | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |
| சைபர்மெத்ரின் | தோல் அரிப்புணர்வு/ மூச்சுத்திணறல் | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |
| டிகோபோல் | தோல் அரிப்புணர்வு | முக கவசம், கையுறை மற்றும் கண் கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் |

PARIJAT Enabling Growth Responsibly

# அத்தியாயம்:11
# நச்சுத்தன்மையின் முக்கோணம்

## எல்.சி 50-இன் அடிப்படையில் பூச்சிக்கொல்லிகளின் வகைப்பாடு

| பூச்சிக்கொல்லிகளை வகைப்படுதால் | மிதமான உயிர் போக்கும் டோஸ் வாய் வழியாக வீரிய நச்சுத்தன்மை எல்.டி 50 மில்லி கிராம்/கிலோ கிராம். பரிசோதனை விலங்குளின் உடல் எடை | மிதமான உயிர் போக்கும் டோஸ் வாய் வழியாக வீரிய நச்சுத்தன்மை எல்.டி 50 மில்லி கிராம்/கிலோ கிராம். பரிசோதனை விலங்குளின் உடல் எடை | லேபிளின் நிறத்தின் அடிப்படையில் அடையலாம்கணுதால் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. அதிகபட்ச நச்சு | 1-50 | 1-200 | பிரகசமான சிகப்பு |
| 2. அதிகமான நச்சு | 51-500 | 201-2000 | பிரகாசமான மஞ்சள் |
| 3. மிதமான நச்சு | 501-5000 | 2001-20000 | பிரகாசமான நீலம் |
| 4. ஓரளவிற்கு நச்சு | 5000 க்கும் மேல் | 20000 க்கும் மேல் | பிரகாசமான பச்சை |




| | |
|---|---|
| சிகப்பு | அதிகபட்ச நச்சு |
| மஞ்சள் | அதிகமான நச்சு |
| நீலம் | மிதமான நச்சு |
| பச்சை | ஓரளவிற்கு நச்சு |

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# அத்தியாயம்:12
# சில செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| தயாரிப்புகளை முறையான ரசீதுகளுடன் வாங்க வேண்டும் | தவறான ரசீதுகளுடன் எந்த தயாரிப்புகளையும் வாங்க வேண்டாம் |
| எப்போதும் பூச்சிக்கொல்லிகளை பாதுகாப்பாக சுமந்து செல்லவும் மேலும் அதற்கு முன் தயாரிப்பு வெளிப்புறத்தில் சேதமடைந்திருக்கிறதா என்பதை சரி பார்க்க வேண்டும் | அளவிற்கு அதிகமான பூச்சிக்கொல்லிகளை முதுகு, தோள்பட்டை மற்றும் கழுத்தில் சுமக்க வேண்டாம் |
| பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தும்போது, கையுறை, இறுக்கமான உடைகள், முக கவசம் மற்றும் பிற பாதுகாப்பு சாதனங்களை பயன்படுத்த வேண்டும் | தொங்கும் உடைகளை பயன்படுத்த வேண்டாம் மேலும் பூச்சிக்கொல்லிகளை கலக்கும்போது மற்றும் தெளிக்கும்போது வாய்க்கு அருகாமையில் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் |
| பூச்சிக்கொல்லிகளை குழந்தைகளிடமிருந்து பாதுகாப்பான தூரத்தில் வைக்க வேண்டும் | பூச்சிக்கொல்லிகளை உணவு பொருட்கள் அல்லது கால்நடை கொட்டகைகளுக்கு அருகில் வைக்க வேண்டாம். |
| பூச்சிக்கொல்லிகளை தெளித்த பிறகு நாப்சாக் தெளிப்பான் மற்றும் மற்ற சாதனங்களை சுத்தமாக கழுவ வேண்டும் | தெளிப்பான்களை கழுவிய தண்ணீர், தரையில் தேங்கி இருக்கும் தண்ணீர் அல்லது தண்ணீர் வரத்துகளில் கலந்து விடாமல் பார்த்துகொள்ள வேண்டும் |
| பூச்சிக்கொல்லிகளை தெளித்த பிறகு கை மற்றும் மறைக்கப்படாத மற்ற உடல் உறுப்புகளை எப்பொழுதும் நன்றாக கழுவவும் | பூச்சிக்கொல்லிகளை தெளித்த பிறகு கைகளை கழுவாமல் எதையும் சாப்பிட வேண்டாம் அல்லது யாரையும் தொட வேண்டாம் |
| தயாரிப்பு தவறாக பயன்படுத்தப்படுவது மற்றும் காலாவதியான தயாரிப்பை பயன்படுத்துவதை தவிர்க்க எப்போதும் லேபிள்களை சரிபார்த்து அதில் இருக்கும் குறிப்புகளை படிக்க வேண்டும். | கடைக்காரரர் அதிகப்படியான தள்ளுப்படி அளித்தாலும், ஒரு போதும் காலாவதியான தயாரிப்புகளை மார்க்கெட்டில் இருந்து வாங்க வேண்டாம். பயன்படுத்திய பிறகு தயாரிப்பை முறையாக அப்புறப்படுத்த வேண்டும். |

PARIJAT
Enabling. Growth. Responsibly

# பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் பற்றி பற்றி



- பரிஜாத் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், முப்பது வருடங்களாக இந்தியாவில் செயல்படும் ஒரு பன்னாட்டு நிறுவனம். 70 நாடுகளில் பரந்து விரிந்து இருக்கும் இந்த உலகளாவிய நிறுவனத்தின் அலுவலகங்கள் 6 இடங்களில் இருக்கிறது மேலும் இந்தியா, ரஷ்யா, சி.ஐ.எஸ் மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் பிரத்தியேகமாக விநியோகம் செய்கிறார்கள்



- சுகாதாரம் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் சிறப்பாக செயல்படுவதன் காரணாமாக, பரிஜாத் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு கீழ்காணும் விருதுகள் வழங்கப்பட்டது, சர்வதேச பாதுகாப்பு மேலாண்மை (2015), தேசிய பாதுகாப்பு கவுன்சில் (2016), தேசிய பாதுகாப்பு கவுன்சில் (2017), பிரிட்டிஷ் பாதுகாப்பு கவுன்சில் (2016), பிரிட்டிஷ் பாதுகாப்பு கவுன்சில் (2017), பிரிட்டிஷ் பாதுகாப்பு கவுன்சில் (2018), கிரீன்டெக் பாதுகாப்பு விருது (2015), கிரீன்டெக் பாதுகாப்பு விருது (2016), க்ரீன்டெக் பாதுகாப்பு விருது (2017), கிரீன்டெக் பாதுகாப்பு விருது (2018), சர்வதேச சுற்றுச்சூழல் மேலாண்மை விருது (2015), கிரீன்டெக் சுற்றுச்சூழல் விருது (2017), கிரீன்டெக் சுற்றுச்சூழல் விருது (2018).



- பூச்சிக்கொல்லிகளின் தயாரிப்பு மற்றும் உற்பத்தித் துறையில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளில் ஒன்றை பரிஜாத் கொண்டுள்ளது



- பூச்சிகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க விவசாயிகளுக்கு சிறந்த தீர்வை வழங்கும் ஒரே நோக்கத்துடன் நுணுக்கமான ஒருங்கிணைப்புடன் பிரத்தியேகமாக செயல்படும் ஆர் & டி துறை (களை) பரிஜத் கொண்டிருக்கிறது

PARIJAT Enabling. Growth. Responsibly.

# இந்திய அரசின் கிசான் சேவை மையம்

## 1800-180-1551



# பரிஜாத் இந்திய விவசாயிகள் உதவி எண் (HelpLine)

## 1800-12300-6141

PARIJAT
Enabling. Growth. Responsibly.

# பாதுகாப்பு விருதுகள்




2015




2016




2017




2016




2017




2018




2015




2016




2017




2018




2018




2019

PARIJAT

Enabling. Growth. Responsibly.

# பூச்சிக்கொல்லி பயன்பாட்டின் போது விவசாயிகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை பரப்புவதற்கான ஒரு பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) முயற்சி

PARIJAT

Enabling. Growth. Responsibly.